# தென்பகுதியில் கடும் மழை 50,000 பேர் பாதிப்பு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 16 இதழ் 103
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29 — 05 — 1993

(கொழும்பு)
தென்பகுதியில் கடும் மழை காரணமாக சுமார் ஐம்பதினாயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டிருப்பதாக சமூக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாத்தறை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் பல்வேறு பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான அவசர நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டதாக சமூக சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திலகரட்ன ரணசிங்க கூறினார்.

பத்தேகம, புளத்சிங்கள ஆகிய பகுதிகளில் வெள்ளத்

(4-ம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் நியமனத்தை எதிர்த்து பிரசாரக் கூட்டம்

(கொழும்பு)
தென்மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் ஐ.தே.க. முறைற்ற விதத்தில் ஆட்சியமைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகள் பிரசாரக் கூட்டங்களை நடத்தவுள்ளன.

தென்மாகாணம் வடமேல் மாகாணம் ஆகியவற்றில் ஐ.தே.க. நீதியற்ற முறையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ மட்டு. அம்பாறை மாவட்டங்களில் கைதான 210 தமிழர் நிலையை தெரிவிக்குமாறு

# ஜனாதிபதியிடம் கோரிக்கை

## இவர்கள் குறித்து 2 வருடங்களாக தகவலில்லை

(மட்டக்களப்பு)
1990ம் ஆண்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கைது செய்யப்பட்ட 210 தமிழர்களின் நிலைபற்றி தெரிவிக்குமாறு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிடம் கோரிக்கைவிடுக்கப் பட்டுள்ளது.

1990ம் ஆண்டு ஜூன் மாதம் மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதிகள்முகாமிலிருந்து ஒரே நாளில் கைது செய்யப்பட்ட 170 தமிழர்கள் நிலைபற்றியும், அம்பாறை மாவட்டத்திலுள்ளஸ்ரீ முருகன் கோவிலிருந்து கைதுசெய்யப் பட்ட 40 இளைஞர்களின் நிலை பற்றி தெரிவிக்கும்படி ஜனாதிபதியிடம் தற்போது கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் கைது செய்யப்பட்ட தமிழர்களின் நிலைபற்றி கடந்த இரு வருடங்களாக எந்தவித தகவல்களும் இல்லை. இவர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்று இவர்கள் உயிருடன் இருந்தால் அது பற்றிய விபரத்தையும் உடன் தெரிவிக்கும்படி ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை பல்கலைக்கழக முகாமிலிருந்து கைதுசெய் செய்யப்பட்ட 170 தமிழர்களில் பெண்களும், சிறுவர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வி-ரி)

## கடந்த 10 ஆண்டுகளில் முப்பதாயிரம் தமிழர் பலி

(யாழ்ப்பாணம்)
பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி ஆகிய இருவரினதும் அதிகாரத்துக்குள் கடந்த பத்து ஆண்டுகளிலும் சுமார் 30,000 தமிழர்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

1984-ம் ஆண்டு தேசிய பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்ற திரு. லலித் அத்துலத்முதலி தமிழினத்தைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் இராணுவத்தை நவீனப்படுத்திவிட்டு ஒழுங்கு படுத்தப்பட்ட இராணுவ அட்டூழியத்தை தமிழ் மக்கள் மீது ஏவிவிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் — ஜெயலலிதா தொடர்பு: வாழப்பாடி ஆதாரத்துடன் வெளியிட வேண்டும்

(சென்னை)
தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடர்புகள் உண்டு என்பதை ஆதாரத்துடன் தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வெளியிட வேண்டும் என்று அ. தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் திரு. சோமசுந்தரம் கேட்டுள்ளார்.

ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் கூறுவதினால் பொய்யும் மெய்யுமாகிவிடும் என்று திரு. வாழப்பாடி நினைக்கின்

(4-ம் பக்கம் பார்க்க)

## சமயா சமய ஊழியருக்கு நிரந்தர நியமனம்

(உடுவில்)
திணைக்களங்கள், அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் சமயாசமய ஊழியர்கள் சகலரும் நிரந்தரசேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

கடந்தவருடம்ஏப்ரல்மாதம் முதலாம் திகதிக்கு முன்பதாக சிற்றூழியர் பதவியில் சமயா சமய அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அனைத்து ஊழியர்களும் சேவையில் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாண சபையில் ஊழல்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)
மேல் மாகாண சபையில் ஊழல்களும், முறைகேடுகளும் நடந்துள்ளது என்று தற்போது ஆட்சி அமைத்திருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல நியமனங்கள் தகுதியற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சில இடங்களில் நியமனங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அந்த அமைச்சர் மேலும் கூறியுள்ளார். — சு

## தமிழகத்தில் தாக்குதல் நடத்தவே புலிகள் சிறைகளிலிருந்து தப்பியோடுகிறார்களாம்

(சென்னை)
தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடுகின்றார்கள் என்று ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மோகித்சிங் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னோடியாகத்தான் விடுதலைப் புலிகள் சிறைகளிலிருந்து தப்பியோடுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை சிறைச்சாலைகளிலிருந்து விடுதலைப்புலிகள் தப்பிச்செல்வது சாதாரண

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் வழங்குமாறு ஈ. பி. டி .பி. யினர் கோரிக்கை

(கொழும்பு)
ஈ. பி. டி. பி. குழுவினர் மீண்டும் கொழும்பில் செயற்படுவதற்கு ஆயுதங்கள் அத்தியாவசியமாக உள்ளது என்று ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஆதரவு கொடுத்தது போன்று இன்றைய ஜனாதிபதி விஜயதுங்காவுக்கு தமதுகட்சி ஆதரவு வழங்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

லலித் அத்துலத்முதலியின் கொலைக்குப்பின்பு எதிர்க்கட்சிகளின் நெருக்குதலினால் திருகோணமலைக்கு இடம் பெயர்ந்த தமது அலுவலகம் மீண்டும் கொழும்பில் இயங்கவுள்ளது. இதற்கு தமக்கு ஆயுதங்கள் தேவை என்றும் அவர் தெரிவித்தார். (சு-ரி)

## புக்காரா விமானங்கள் வவுனியாவில் குண்டுவீச்சு

(வவுனியா)
வவுனியா ஈச்சங்குளம் காட்டுப்பகுதியில் புக்காரா விமானங்கள் கடும் குண்டு வீச்சுக்களை நடாத்தியுள்ளன.

மேற்படி பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் 6 குண்டுகளை வீசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (வி-ரி)

## வரிவிளம்பரம்

### நுளம்பு விரட்டி

நுளம்பை விரட்ட "நீம்" தூபம். கமழ்வது நறுமணம். அகல்வது நுளம்பு. பெறுவது நித்திரை இன்பம் நோயற்ற சுகவாழ்வு. பக்கற் விலை ரூபா 3/- 25 பக்கற் கொண்ட காட் ஒன்று ரூபா 60/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் பெறலாம். — "மிக்க வைற்". (எ-3164)

### புதிய வகுப்புக்கள் (ஆண்டு 3, ஆண்டு 5)

ஆண்டு 3 புதிய வகுப்புகள் 29-05-93 சனி பி. ப. 2-00 மணிக்கும் ஆண்டு 5 புலமைப் பரிசில் Paper Class 29-05-93 சனி பி. ப. 4-00 மணிக்கும் ஆங்கில இலக்கியம் 29-05-93 சனி பி. ப 4-30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன. மாணவர் தொகை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-153)


## சுகாதாரப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு பற்றி பயிற்றுவிப்பதற்கு பயிற்சி பெறுவதற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து பத்துப்பேர் தெரிவாகி களுத்துறை தேசிய சுகாதார கல்வி நிறுவனத்திற்கு சென்றுள்ளனர்.

இவர்களுக்கு அங்கு பத்து நாள் பயிற்சி வழங்கப்படும். இவர்கள் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு திரும்பியதும் யாழ்.மாவட்டத்திலுள்ள பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பர். (159)


## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

சேர் பொன். இராமநாதன் காலத்து பழமைவாய்ந்த தளபாடங்கள் திருத்தி அமைத்தல்

எமது பல்கலைக் கழக நூலகத்திலுள்ள பழமை வாய்ந்த தளபாடங்களை அதே பொலிவுடன் மீளத் திருத்தி அமைத்துத் தருவதற்கு அனுபவமுள்ள விற்பன்னர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் 10-06-1993 காலை 10 மணிக்கு முன்னதாக "நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பழமை வாய்ந்த தளபாடங்கள் திருத்தி அமைத்தல்' என்று எழுதப்படல் வேண்டும். இதற்கு விண்ணப்பப்படிவங்கள் எவையும் எம்மால் வழங்கப் படமாட்டாது. தளபாடங்களை அலுவலக நேரத்தில் நூலகத்தில் பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக் கழகம்.
(எ- 3162)


## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தாரால் மாதந்தோறும் நடாத்தப்படும் யோகாசன கருத்தரங்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை 30ம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு 'யோகமும் ஆளுமை வளர்ச்சியும்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது. வண பிதா. எஸ். டேமியன் யோகிராஜன் யோகாசன கலாநிதி சுவாமி சிவானந்த சரஸ்வதி யோகி ஆகியோர் கருத்துரை வழங்குகிறார்கள். (சு)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பரியோவான் கல்லூரி ஆங்கிலதினம் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது இவ்விழாவுக்கு பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வி. எல். ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (159)

★

(யாழ்ப்பாணம்)

பொன்விழா ஆண்டை யொட்டி வல்லை சனசமூக நிலையம், வல்லை விளையாட்டுக் கழக அனுசரணையுடன் நடாத்தும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகளும், பரிசளிப்பு விழாவும் தீருவில் மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்லை விளையாட்டுக்கழகம் மோதுகிறது. பிரதம விருந்தினராக கடற்புலிகள் சிறப்புத்தளபதி தி. சூசை பங்கு பற்றுகிறார். (சு)

★

(கொழும்புத்துறை)

யாழ். தேசிய கூட்டுறவுச் சபையினுல் யாழ். பரியோவான் கல்லூரியில் இன்று 29ம் திகதி சனிக்கிழமை யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஐக்கிய நாணய சங்க கூட்டுறவுச் சங்கத்தினைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்குப் பிராந்திய சபைத்தலைவர் செ. கந்தசாமி தலைமையில் கூட்டுறவும்-நடைமுறைக் கணக்கு முறைகளும் என்ற தலைப்பில் கருத்துரைகள் வழங்கப்படும். (154)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

வவுனியா பம்பைமடுவில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் ரெலோவுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 2ம் லெப். பழனி (அந்தோனிப்பிள்ளை விக்வராஜா, குளாமுளம்) என்ற போராளி வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மோதலில் மூன்று ரெலோ உறுப்பினர்கள் புலிகளால் சுட்டுச் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி-கி)

## இராசி பலன்

29-05-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 16)

அட்டமி மு. ப. 9-24 வரை. பூரம் மு. இ 8-28 வரை, சரி நாள் இராகுகாலம் காலை 8-52 முதல் 10-22 வரை, சுப நேரம் பிற்பகல் 5-22 முதல் 4-22 வரை, சித்தயோகம்.

மேடம்: பெண்களால் கஷ்டம், கண்நோய், காரியதாமதம்.

இடபம்: வீட்டில் விரோதம் மனவேதனை, கண்டிப்பு.

மிதுனம்: கலைவில் மகிழ்ச்சி, அதிகாரம், பணவரவு.

கடகம்: கடினவேலை, ஜீவன கஷ்டம், அசாத்திய துணிவு.

சிங்கம்: நண்பர் மதிப்பு, கௌரவம், தொழில்வெற்றி.

கன்னி: கடமை தவறல், தெய்வ சிந்தனை, வெறுப்பு.

துலாம்: தலைாயம், குடும்ப மகிழ்ச்சி, எதிர்பார்த்த நற்செய்தி

விருச்சிகம்: வாக்குத்திறமை சகோதர உதவி, விருந்துண்ணல்.

தனுசு: தவறான தகவல், தொழில் முரண்பாடு, அலைச்சல்.

மகரம்: வீண் குழப்பம், மனைக்குறைவு, எதிரிகள் பயம்.

கும்பம்: இனசன மகிழ்ச்சி, சுபகாரியம், பயணநன்மை.

மீனம்: தொழில் சிறப்பு, குடும்ப உல்லாசம், புதிய நட்பு.

— ஜோதிடன்

## ஆசிரியர் இடர் நிவாரணம் வழங்குவதில் தாமதம்

(திருநெல்வேலி)

ஆசிரியர்களுக்கான ஆறு மாதகால இடர் நிவாரணம் வழங்க மாகாண சபை அனுமதியளித்த போதும் இத்தொகை அனுப்பி வைக்கப்படவில்லை என கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேவையான பண விபரம் கல்வித் திணைக்களத்தினூடாக அனுப்பப்பட்டு விட்டதாகவும் இதனை வழங்குவதற்கு மாகாணசபைநிதியை வழங்கவில்லை எனவும் இதனாலே மேற்படி நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

1990ம் ஆண்டு ஆறும்மாதத்திலிருந்து 12ம் மாதம் 31ம் திகதிவரைக்குமான வேலை நாட்களுக்கே இடர் நிவாரணம் வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (157-கி)


வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
யாழ் கல்விக்கோட்டம் நடாத்தும்

## கலை விழா

இடம்: ஸ்ரான்லிக் கல்லூரி (யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்)

நேரம்: இரவு 7.00 மணி

காலம்: 30-05-1993

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பளிப்பு: 10/- 15/-

விளம்பர அன்பளிப்பு
சயன்ஸ் ஹோல்

(எ 3165)





கோண்டாவில் தில்லையம்பதியில்
இன்று நான்காம் திருவிழா

ராகம்: கல்யாணி

ஆலரச மரத்தின் அருள்மிகு
பொந்திலூடே
ஆனந்தக் கலசம்காட்டும்
அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம்
பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின்
ஜோதியான கல்யாணி

தில்லையம்பதியாளே சிவகாம சுந்
தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா-தேவி

ஆக்கம்:
கவிமாமணி ந. வீரமணிஐயர்
(கி143)



## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் இராயப்பு சூசைப்பிள்ளை

மலர்வு: 1916-01-01

உதிர்வு: 1993-04-29

அவரது ஆத்மசாந்திக்காக 29-5-1993 சனிக்கிழமை பி. ப. 5 மணியளவில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

சுழாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டை.

(சி-149)



அகில இலங்கை
இளங் கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

ஈழநாதம் மக்கள் தினசரியின் ஆதரவில்

இடம்: மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 30-5-1993, ஞாயிறு மாலை 5 மணி.

நிகழ்ச்சி நிரல்

மாலை 5-00 — 5-45 வயலின் இசை

செல்வி சிவகலா சிவஞானம் — வயலின்
செல்வன் எஸ். துரைராசா — மிருதங்கம்

5-45 — 6-45 இசைக் கச்சேரி

செல்வி கனகாம்பரி பத்மநாதன் — பாட்டு
திரு. வி. ஆர். இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. ப. இசதிருபன் — கடம்

6-45 — 7-15 மங்கள விளக்கேற்றல்

சு. நந்தகுமாரன்
உரிமையாளர்: கலைமகள் வர்த்தக நிலையம்.

இ. தேவராஜா
வர்த்தகர்: சோபனா ஆடை அகம்.

தலைமையுரை:
திரு கே. ஜெயரெத்தினம் அவர்கள்
(அதிபர் தொழில் நுட்பக் கல்லூரி, கோக்குவில்)

பிரதம விருந்தினர் உரை:
திரு. செ. பத்மநாதன் அவர்கள்
(திட்டமிடல் பணிப்பாளர், யாழ். செயலகம்)

7-15 - 8-30 சிறப்பு நிகழ்ச்சி

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

'ஊரெங்கும் போர்ப்பாட்டு'
கிராமிய இசை நடன நிகழ்ச்சி

இசை ஆர்வலர்கள் அபிமானிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

20-5-93

மேற்படி
மன்றத்தினர்

(சி-155)

# மாசுறும் சூழலும் நாசமுறும் மனித குலமும்

'தேசிய மரநடுகையில் எம் தேசம் மாசுபடும்' என்ன பொருத்தமான வார்த்தைகள் இவை. இந்த வார்த்தைகள் இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன் ஒரு சிலரால் மட்டுமே உச்சரிக்கப்பட்ட வார்த்தைகள். ஆனால் இன்று உலகில் உள்ள அத்தனை மனித உயிர்களுமே உச்சரிக்கும் வார்த்தைகளாய் இது மாறியுள்ளது அந்தளவுக்குப் பூமியை மனிதன் மாசுபடுத்தி விட்டான்.

பூமியை மனிதர்கள் மாற்றி விருக்கும் தன்மையைப் பார்ப்பதற்கு விண்வெளிக்குப் பறந்து செல்ல வேண்டியதில்லை. இன்றைக்கு நாம் அருந்துவதில், சுவாசிப்பதில், முகர்வதில், பார்ப்பதில் மாசு நிறையவே நிறைந்திருக்கிறது. 100 வருடங்களுக்குள்ளாக, அதிலும் கடந்த 30 வருடங்களில் மனிதர்கள் பூமியைப் பேரழிவின் விளிம்பிற்கே கொண்டுவந்து விட்டிருக்கின்றார்கள். இப்போது பூமியில் சுற்றுச் சூழல் அழிவு தான் மனித குலத்திற்கு மிகப் பெரிய ஆபத்து.

25 ஆண்டுகளில் பூமியின் உஷ்ணம், சராசரி ஒன்று முதல் இரண்டு டிகிரி வரை அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சில பகுதிகளில் அது ஆறு டிகிரி வரை கூட அதிகரிக்கலாம். பெருங்கடல் வெப்பத்தை ஈர்த்துச் சேமிப்பதால் நீர் மட்டம் அதிகரிக்கலாம். கடல் புகுந்துவிடும் நிலையிலுள்ள 60 தீவு நாடுகளுக்குத்தான் உடனடி ஆபத்து. மாலைதீவு போன்ற பல தீவுகள் ஒரே மடியாக மூழ்கிப்போகக்கூடும். இதேவேளை பூமியின் உஷ்ணம் இப்போது ஈரமாக இருக்கும் பகுதிகளில் ஈரப் பதத்தைப் பெருமளவில் குறைத்து நிலங்களைப் பாலைவனம் போல ஆக்கிவிடும்.

அண்டார்டிகாவில் ஓசோன் படலத்தில் பெரிய ஓட்டை விழுந்துவிட்டதை என்பது களின் ஆரம்பத்திலேயே விஞ்ஞானிகள் கண்டு தெரிவித்தார்கள். சூரியன் உதிரும் அதி ஊதாக் கதிர்களிடம் இருந்து உயிர்களைப் பாதுகாக்கும் கேடயமான ஓசோன் படலம் 30 சதவீதம் குறைந்து விட்டது இதன் காரணகர்த்தாவும் மனிதனேதான். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மக்கள் அதிகம் வாழும் பகுதியில் ஓசோன் ஓட்டை விழுந்து தோல் புற்று நோயால் மக்கள் அதிகம் பலியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றுடன் தோலில் புதிய புதிய நோய்களும் இதனால் உருவாகி வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந் நிலை போதாது என்று பசுமை பூத்துக் குலுங்கும் காடுகளைக் கூடக் கண்மூடித்தனமாக அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. ஒரு காலத்தில் அடர்ந்த வனமாக இருந்த பிரேசிலின் அமேசானியக் காடுகள், மலேசியாவின் பிரமாண்டமான மூங்கில் காடுகள், கானாவின் புதர்க் காடுகள் ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம். காடழிப்பால் ஒவ்வொரு ஆண்டும் 100க்கும் மேற்பட்ட உயிரின வகைகள் அற்றுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்கூறப்பட்டவற்றைவிட அதிகமாக பல்வேறு காரணங்களால் பூமி மாசுறுவது அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களால் பூமியில் ஏற்பட்டுவரும் நிலை எமது தமிழீழ தேசத்தையும் விட்டுவைக்கப் போவதில்லை. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஏற்பட்டுவரும் மாசடைவுகளைப் போல பாரிய அளவில் எமது சூழல் மாசடையவில்லை என்பது ஒரு மகிழ்வான விடயமே. ஆயினும் சூழல் மாசடைவதால் எமது தேசமும் பல பாதிப்புகளுக்குள்ளாகி வருவது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. கோடைகள் வரவர அனல் தினங்களாக மாறி வருகின்றன. மழை வீழ்ச்சிகூட மந்தமாகவே உள்ளது. உலகமே விழித்துக்கொண்டு 'சூழலுக்கென மாநாடு' நடத்தும் போது, நடப்பது நடக்கட்டுமெனவும், வெள்ளம் தலைக்கு மேல் போனாலும் என்ன ஆகிறது பார்ப்போம் எனவும் நாம் ஒதுங்கி நிற்பது எந்த வகையில் பொருந்தும்? எமது சூழலைக் காப்பதன் மூலம், எம்மையும். எமது சந்ததியையும் காப்போம் என உறுதி எடுப்போம்.

ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனித்தனியே நுரையீரல்கள் உண்டு. ஆனால் அத்தனை உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கான ஒரே நுரையீரல் மரங்களிடையே தான் உள்ளது. சுவாசப்பைக்கு ஏதேனும் ஊறு விளைந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படுவது உறுதி போல மரங்கள் அழிக்கப்பட்டால் மனித உயிர்களும் மற்ற உயிர்களும் வாழும் இந்தஇயற்கை சூழல் மாசுற்று அழிய நேரிடும் என்பது உறுதியாகும் மரங்கள் மனித இனத்தின் இதயமாக, இயற்கையின் நுரையீரலாக, பிராணவாயுவின் பிறப்பிடமாக விளங்குகின்றன. இத்தகைய மகத்தான சேவை புரியும் மரங்களைப் பாதுகாக்கவும், நட்டுப்பராமரிக்கவும், நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடுகளும் எதிர்காலத்தில் ஒரு வளமான தேசத்தை உருவாக்கும் அத்திவாரக் கற்களாகும் இதுவெல்லாம்தாமதமின்றி செய்யப்படவேண்டும். ஆபத்து எம் குழந்தைகளின் எதிர்காலத்தில் இல்லை. இங்கேயே இப்போதே உலகில் உள்ள அத்தனை நாடுகளும் ஒன்றிணைந்து ஒவ்வொருவரும் தங்கள் சுற்றுடலைப் பேணும் எண்ணத்தின் வெளிப்பாடாக வருடத்தில் ஒருநாள் உலக சுற்றுடல் தினமாக பிரகடனப் படுத்தியுள்ளன. பிரகடனப் படுத்தப்பட்ட அத்தினமான ஜூன் 05ம் திகதியை எமது தேசத்தின் சூழலைப் பாதுகாக்க நாமும் உறுதியெடுப்போம்! செயற்படுவோம்!

-'சூழல் பாதுகாப்புப் பகுதி'

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## புகை பிடிப்பதால் 30 லட்சம் பேர் மரணம்

(கொழும்பு)

புகை பிடித்தல் காரணமாக உலகெங்கும் வருடாந்தம் 30 லட்சம் பேர் மரணமடைகிறார்கள் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மருத்துவர்கள், தாதிமார்கள் புகைப் பிடிக்கும் பழக்கத்தைத் தாம் மேற்கொள்ளாது மற்றவர்களுக்கு முன் மாதிரியாக நடக்கவேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் மேலும்சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் 'உலக சுகாதார ஸ்தாபனத்தில்' பல நாடுகளிலும் பணியாற்றும் சுமார் மூவாயிரம் பேர் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக புகை பிடித்தலை நிறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சு-வி)

## பாட்டாளி மக்கள் கட்சி அ. தி. மு. க. உறவு இல்லை

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணி அமைத்துக்கொள்ள விரும்புவதாக காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது ஆதாரமற்றது என கட்சியின் துணைச் செயலாளரும், மாநில வருவாய்த்துறை அமைச்சருமான எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக அ. தி. மு. க. பாட்டாளி மக்கள் கட்சியுடன் உறவு வைத்துக்கொண்டுள்ளது என்று பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. (சு-வி)

## சதாமை பதவி நீக்க எதிர்க்கட்சிகள் முயற்சி

(பாக்தாத்)

ஈராக்கின் அதிபர் சதாம் ஹுசையினைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஈராக்கிய எதிர்க் கட்சிகள் சவூதி அரேபியாவின் உதவியை நாடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சவூதி அரேபியாவில் மெக்கா நகருக்கு ஹஜ் யாத்திரையை மேற்கொண்ட ஈராக்கின் எதிர்க் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் மூவர் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் அப்துல்லாவைச் சந்தித்து ஜனாதிபதி சதாம் ஹுசையினைப் பதவி விலக வைக்கும் வழிமுறைகள் பற்றி விரிவாக பல மணித்தியாலங்களாக பேச்சுக்கள் நடாத்தியதாகவும் கூறப்படுகின்றது. (வி-வி)

## விவசாயத்திற்கு தேவையான உரம் கொள்வனவு செய்ய ப. நோ. கூ. ச. முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளின் உரத்தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உரத்தை நேரடியாக கொழும்பிலிருந்து கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கவுள்ளன

இதனால் யாழ் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் உரத்தேவை பூர்த்தியாக்கப்படுமென நம்பப்படுகிறது. யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் யாழ். மாவட்ட பல நோ. கூ. சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. (159)

## மாணவர்கள் — கல்லூரியின் பெருமையை பாதுகாக்க வேண்டும்

(அச்சுவேலி)

''பரீட்சையை மட்டும் இலக்காகக் கொண்டு கல்வியைத் தொடரக் கூடாது. தனது நாட்டுமக்களையும் மண்ணையும் நேசித்து தான் கல்வி கற்ற கல்லூரியின் பெருமையை பாதுகாக்க வேண்டும்''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப. புஷ்பரத்தினம் தெரிவித்துள்ளார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்றுகூடல் செல்வன் து. மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. ஒன்றுகூடலில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திரு. ப. புஸ்பரத்தினம் தொடர்ந்து உரையாற்றும் போது: தமிழ் மக்களின் கல்விப் பாரம் பரியத்தின் சிறப்பியல்பு குறைவடைந்து வருகிறது. மாணவர்கள் தாம் கல்வி கற்கின்ற பாடசாலையிலும் கற்பிக்கின்ற ஆசிரியர் மீதும் நம்பிக்கை வைத்து தனது மண்ணையும் மக்களையும் நேசித்து கல்வியில் முன்னேற வேண்டும். தனது கல்வியின் பெருமையை பாதுகாக்கவேண்டும். பரீட்சையை மட்டும் இலக்காக வைத்து கல்வியை தொடரக் கூடாது. பரீட்சையை இலக்காகக்கொண்டு மாணவர்கள் பாடசாலை, தனியார் கல்வி நிலையம் என பெருமளவு நேரம் அலைகின்றநிலை கல்வியின் நோக்கத்தையும் பாடசாலைகளின் தனிப்பெருமையையும் சிதைவடையச் செய்கின்றது என்றார். (74-சி

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சனி, ஞாயிறு கிழமைகளில் புகைப்படக்கலை அடிப்படை பயிற்சி நெறி தொகுதி 4, கிராம அலுவலர் பயிற்சி நெறி தொகுதி 2, செயல் திட்ட செயல் முறை அடிப்படை கற்கைநெறித் தொகுதி 1 ஆகிய வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இம்மூன்று கற்கைநெறிகளிலும் 300 க்கும் மேற்பட்டோர் கல்வி பெற்று வருகின்றனர்.

## கல்வித் துறையில் மாற்றம் வருகிறது

(கொழும்பு)

கல்வித்துறையில் பல மாற்றங்களைச் செய்வதற்கு கல்வி அமைச்சின் அதிகாரிகள் தற்போது நடவடிக்கைகள் எடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இதன் அடிப்படையில் மீண்டும் வட்டாரக்கல்வி அதிகாரி முறை செயல்படுத்தப்படவுள்ளது. பாடசாலைகளின் நிர்வாகம், கல்வி மேற்பார்வை போன்ற கடமைகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இத்துடன் பரலர் கல்வி முறையிலும் பல மாற்றங்கள் செய்யப்பட இருப்பதுடன் கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் கல்வி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. -வி-சி

## படிப்பகம்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவில் இந்து இளைஞர் சங்கத்தினரால் படிப்பகமொன்று சமூக மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (71)

## சுகவாழ்வு பற்றிய விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் சுகவாழ்வு பொதுவிரிவுரைத் தொடரின் 9வது அமர்வு இன்றுசனிக்கிழமை 29ம் திகதி காலை 9 மணி முதல் 12 மணி வரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

வைத்திய கலாநிதி (திருமதி) வே. கணேசமூர்த்தி தலைமையின்கீழ் இடம்பெறவுள்ள 9வது அமர்விலே யோகமும் சுகவாழ்வும்'' என்ற பொருளில் வைத்திய கலாநிதி வைத்திய நிபுணர் தயா சோமசுந்தரமும், 'மருத்துவத்தில் யோகம்' எனும் பொருளில் வைத்திய கலாநிதி இ. சிவசங்கரும் 'கல்வித்துறையில்யோகம்' எனும் பொருளில் வண. பிதா என். டேமியனும் விரிவுரைகளை வழங்கவுள்ளார்கள்.

பதிவுசெய்தோர் மாத்திரமன்றி மேற்படி தலைப்புகளில் விரிவுரை கேட்க விரும்பும் எவரும் வந்து பயன்பெற முடியுமென புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (வி)

## ஒத்தி வைப்பு

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் உள்ள அமேதி தொகுதியில் இன்று நடைபெறவிருந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சிறப்பு மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடும் சூறாவளிக் காற்று அங்கு வீசியதையடுத்தே மாநாட்டுப் பந்தலுக்குப் பெரும் சேதமேற்பட்டு மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (சு)

## மாதாந்த கொடுப்பனவு

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் காசநோய், புற்று நோய் உதவிப் பணம் பெறுவோருக்கான ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படுகிறது. (163)

# கொப்பேகடுவ பலியான இடத்தில் தடய பொருள் எதுவும் கிடைக்கவில்லை

## சர்வதேச ஆணைக்குழு முன் சாட்சியம்

(கொழும்பு)

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இறந்த இடத்தை பரிசோதனை செய்தபோது எந்தவித தடயப்பொருளும் கிடைக்கவில்லை என்று பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் ஆரம்பமாகி உள்ள சர்வதேச ஆணைக்குழு முன் லெப்டினன்ட் ஜெனரல் ரொட்ரிக்கோ சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

சம்பவம் நடந்த இடமான அராலிச் சந்திக்கு குண்டு வெடித்ததின் பின்பு நானும் இராணுவ அதிகாரிகளும் சென்றோம். 2½ மணித்தியாலம் வரை அருகே உள்ள இடங்களில் தேடுதல் நடத்தினோம். இதுபற்றி எந்தவித தடயங்களும் கிடைக்கவில்லை.

மூன்று மணித்தியாலத்தின் பின்பு வேலணை இராணுவ முகாமுக்கு குண்டு வெடிப்பினால் சேதமான வாகனத்தைக் கொண்டுசென்றோம். வாகனத்தின்முன் போனதிறும் ரயரும் சேதமாகி இருந்தன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

வாகனத்தின்முன் இல்லு குண்டின்மேல் ஏறிய ஒரு விநாடியில் குண்டு வெடித்தது என்று லெப்டினன்ட் ஜெனரல் ஆரியரத்னவும் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தபோது குறிப்பிட்டார். சு-ரி

## பரீட்சை பெறுபேறுகள்

(கொழும்பு)

பொது எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வாரமளவில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றினர் என்றும் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் பரீட்சைக்கு 23 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றினர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலத்தில் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மீட்பு நிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக்கடனைச்செலுத்த முடியும் எனப் தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## அ. தி. மு. க. புலிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தை

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கும் அ. தி. மு. கவுக்குமிடையில் அண்மையில் புதுடில்லியில் இரகசியமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்பே விடுதலைப்புலிகள் சிறைகளில் இருந்து தப்பிச்செல்ல ஆரம்பித்துள்ளனர் என்று ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு காரணமாக இருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை கைதுசெய்து இந்தியாவுக்கு கொண்டுவந்து நீதிவிசாரணை நடாத்தவேண்டும் என்றும் திரு. சுப்பிரமணியம் சுவாமி மத்திய அரசிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார். (வி)

### தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடயமல்ல என்றும் இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யாராகவிருந்தாலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்றும் மத்திய அமைச்சர் தங்கபாலு கூறியுள்ளார். (வி-ரி)

## பாகிஸ்தானில் மீண்டும் தேர்தல் நடத்தக் கோரி எதிர்க்கட்சிகள் பேரணி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மீண்டும் தேர்தலை நடாத்தவேண்டுமெனக்கோரி எதிர்க்கட்சிகள் நேற்று ராவல்பிண்டியில் முன்னாள்பிரதமர் திருமதிபெனாஸிர் பூட்டோவின் தலைமையில் மிகப்பெரிய அளவிலான பேரணி ஒன்றையும் அதன் பின் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடாத்தினர்கள்.

திருமதி பெனாஸிர் பூட்டோவின் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் நவாஸ் ஷெரீப் அமைச்சரவையிலிருந்து முன்னர் விலகிய சில அமைச்சர்களும் கலந்து கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கணிப்பு வாக்கெடுப்பில், பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் அமைச்சரவையிலிருந்து விலகிப்போன வேறு சில அமைச்சர்கள் பிரதமருக்கு ஆதரவாக வாக்களித்ததினால் திருமதி பெனாஸிர் பூட்டோவின் எதிர்கால அரசியலுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிட்டதாக பி. பி. ஸி. நேற்று அறிவித்தது. (வி)

## பாடசாலைகளுக்கு 1ம் திகதி விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப்பாடசாலைகள் திணைக்கள நாட்காட்டியில் ஏற்கனவே அறிவித்தமைக்கமைய 01ஆந் திகதி செவ்வாய்கிழமையே விடுமுறையாக இருக்கும். இவ்வேறுபாடுகள் ஏற்கனவே ஒழுங்கு செய்த நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்காகவும் யாழ். கல்வித்திணைக்களமும் பாடசாலைகளும் 2ம் திகதி புதன்கிழமை வழமைபோல் இயங்குமென்று யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஹஜ் பெருநாளை முன்னிட்டு 2ம் திகதியே விடுமுறை என அரசு அறிவித்துள்ளதும் தெரிந்ததே. (159-சி)

## பாடசாலைகளில் — கொத்தணி முறை விரைவில் நீக்கப்படும்

(திருநெல்வேலி)

கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பு முறை விரைவில் நீக்கப்பட உள்ளதாகவும், அதற்கு மாற்றீடாக வலயங்களாகப் பிரிக்கப்பட்டு இருபது பாடசாலைகள் ஓர் வலயத்திற்குள் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு தவிர ஏனைய மாகாணங்களில் ஏற்கனவே இம்முறை அகற்றப்பட்டுவிட்டன. இம்முறையினால் மூலாதாரப் பாடசாலை தவிர ஏனைய பாடசாலைகள் தரம் உயர்த்துவதற்கான முயற்சி தோல்வியுற்ற நிலையிலேயே இவை நீக்கப்படுகின்றன.

பிரதேச செயலகம் மினிக்கச்சேரியாக முழு அளவில் செயற்படத் தொடங்கியவுடன் கல்விப் பகுதியும் அதன்கீழ் ஏழு பிரிவாக வலயமாகவும் செயற்படவுள்ளது. இதற்கான திட்டங்களை மாகாண அமைச்சு தயாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-இ)

## புலிகள் தப்பிச் செல்வதற்கு மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்க வேண்டும்

(சென்னை)

தமிழ்நாடு சிறைச்சாலைகளிலிருந்து விடுதலைப்புலிகள் தப்பிச் சென்றதற்கு மத்திய அரசும், மாநில அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு செயலாளர் திரு. ஆர். நல்லகண்ணு கூறினார்.

மேற்படி விடயத்தில் மத்திய அரசும், மாநில அரசும் ஒன்றை-ஒன்று குற்றம் சாட்டுவது பொதுமக்களை மாற்றும் ஒரு செயலாகும் என்று திரு. நல்லகண்ணு சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நேற்றுக் கூறினார். (வி)

### கடந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிரேமதாசா கடந்த மூன்று வருடங்களாக இரக்கமின்றி தமிழ்மக்கள் மீது போரைத் தொடர்ந்து நடத்தி வந்தார். உணவுத் தடை, மருந்துத்தடை, எரிபொருள் தடை, உற்பத்தித் தடை, போக்குவரத்துத் தடை என்று ஒரு முழுமை பெற்ற பொருளாதாரத் தடையை தமிழர்கள்மேல் திணித்தார். இவ்வாறு விடுதலைப்புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. —ரி

## வீரப்பனை பிடிப்பதற்கு ராணுவம் அனுப்புமாறு கர்நாடக அரசு கோரிக்கை

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்க கர்நாடக அரசு இராணுவ உதவியை நாடியுள்ளது.

எல்லைக்காவல் படையிலுள்ள இராணுவத்தினரை உடன் அனுப்பி வைக்கும்படி கர்நாடக முதலமைச்சர் திரு. வீரப்பமொய்லி மத்திய அரசுக்கு அவசர செய்தியை நேற்று அனுப்பி வைத்தார்.

இதேநேரம் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் கும்பலை பிடிப்பதற்காக மேட்டூர் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தமிழ்நாடு கர்நாடக சிறப்பு அதிரடிப்படையினர் அப்பகுதி மக்களை துன்புறுத்தி வருவதாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் திரு. ராம்தாஸ் குற்றம் சாட்டியுள்ளார். - வி)

### தென்பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் மூழ்கி மூவர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கலவான பிரதேசத்தில் பத்து வீடுகள் சேதமடைந்துள்ளன. காலி மாவட்டத்தில் பத்தேகம, கிந்தோட்ட, பலப்பிட்டிய, அம்பலாங்கொட ஆகிய பிரதேசங்கள் தொடர்ந்து நீரில் மூழ்கியிருக்கின்றன. போக்குவரத்தும் இப்பகுதிகளில் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பலாங்கொடையில் சுமார் 800 பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர். பத்தேகம, உடுவல, மாத்தலகம, அக்பிட்டிய ஆகிய பிரதேசங்களிலும் வெள்ளம் காரணமாக போக்குவரத்து உட்பட அன்றாட அலுவல்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க கட்டிடங்கள் பலவும் நீரில் மூழ்கியிருக்கின்றன. வீடுகளை இழந்தவர்களுக்கு தற்காலிக இருப்பிட வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரிப் பட்டினத்தில் பஸ்நிலையம் உட்பட பல பகுதிகள் நீரில்மூழ்கியுள்ளன. பல இடங்களிலுள்ள பிரதான வீதிகள் வெள்ளம் அதிகரித்துள்ளது. ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான வயல்கள் நீரினால் மூடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. —ரி

### புலிகள் ஜெயலலிதா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர். விடுதலைப்புலிகளுக்கும் முதலமைச்சருக்கும் தொடர்பு உண்டு என்று கூறி மக்களை குழப்புகின்றூர். திரு. வாழப்பாடி ஆதாரம் இருந்தால் அதை தயங்காது உடனடியாக வெளியிடவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். —வி-ரி

### முதலமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியை அமைத்திருப்பதை இலங்கையில் உள்ள மனித உரிமை குழுவுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்று யுக்திய ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்துக்கு அமரசிறி தொடங்கொடவும் வடமேல் மாகாணத்துக்கு பிரேமச்சந்திராவும் எதிர்க்கட்சிகள் முதலமைச்சர்களா நியமிக்கப்பட்ட பின்பு ஐ.தே. கட்சி முதலமைச்சர்களாக நியமித்தது முறையற்ற செயல் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஒன்றியத்தினால் வாராந்தம் நடாத்தப்பட்டு வரும் சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளது. ஆய்வரங்கில் இவ்வார கருப்பொருளாக "மாரக திசை" பற்றிய ஆய்வுகள் இடம் பெறும். ஓய்வு பெற்ற விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் ஐ. வைத்தியநாதர் ஆய்வரங்கை நெறிப்படுத்துவார். (எஸ்-கி)

### சமயாசமய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வூழியர்கள் தொடர்ந்தும் சேவையில் இருப்பின் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர். திணைக்களங்கள், அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் இத்தரங்களில் வெற்றிடங்கள் இவர்கள் மூலம் நிரப்பத்திசெய்யப்படும் —109-சி

## கம்போடிய தேர்தல் நேற்று முடிவடைந்தது

(லண்டன்)

கம்போடிய தேர்தல் நேற்று முடிவடைந்தது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் இன்று பிரச்சினைகள் எழக்கூடுமென அவதானிகள் கருதுகிருர்கள்.

தேர்தல் காலத்தில் இடம் பெற்ற வன்செயல்களில் இருந்து புதிய அரசாங்கத்தை அமைக்கும் போது மோதல்கள் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று கம்போடியாவில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

குறைந்த பட்சம் 88 வீதமானோர் வாக்களித்திருக்கக் கூடும் என அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர்.

முதலாவது தேர்தல் முடிவுகள் இன்று வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த வார நடுப்பகுதியில் முடிவுகள்யாவும் வெளிவந்த பின்னர் அவசர பாராளுமன்றம் கூடவிருக்கிறது. (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number (D/10936/N